**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 6.**

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மே – 2022.**

**வணிகவியல் விடைக் குறிப்புகள்**

குறிப்பு :

**1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.**

**2. பகுதி – அ –வில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.**

**3. விடைக் குறியீடு அல்லது விடை ஆகியவற்றுள் ஏதேனும் மாறியிருப்பின் 0 மதிப்பெண் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.**

பகுதி – 1 மொத்த மதிப்பெண்கள் 20

| | Type – A | | Type - B |
|---|---|---|---|
| 1 | இ) தனியாள் வணிகம் | 1 | இ) சுற்றாடும் வியாபாரிகள் |
| 2. | ஈ) உரிமையாளர்கள் | 2 | அ) நிறும செயல்முறை விதிகளின் மாதிரி |
| 3. | அ) 3 | 3 | அ) பொதுப்பண்டகக் காப்பகங்கள் |
| 4. | இ) உற்பத்தி தொழில் | 4 | ஆ) பன்னாட்டு வியாபாரம் |
| 5. | ஈ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு | 5 | ஈ) இரண்டு |
| 6. | இ) சம்பளம்/கூலி | 6 | ஆ) ஒப்பந்தத்தால் |
| 7. | ஈ) 1872 | 7 | ஈ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு |
| 8. | ஆ) ராபர்ட் ஓவென் | 8 | இ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வணிகம் (W2R) |
| 9. | ஈ) அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது | 9 | ஈ) முழுவதும் வரி விலக்கிற்கு உட்பட்டது |
| 10. | அ) நிறும செயல்முறை விதிகளின் மாதிரி | 10 | ஈ) கூட்டுறவு |
| 11. | ஈ) இரண்டு | 11 | அ) Goods and Services Tax |
| 12. | ஆ) பன்னாட்டு வியாபாரம் | 12 | ஈ) அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது |
| 13. | ஈ) கூட்டுறவு | 13 | இ) உற்பத்தித் தொழில் |
| 14. | ஈ) முழுவதும் வரி விலக்கிற்கு உட்ப்பட்டது | 14 | ஈ) 1872 |
| 15. | இ) சுற்றாடும் வியாபாரிகள் | 15 | அ) 3 |
| 16. | இ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வணிகம் (W2R) | 16 | ஆ) ராபர்ட் ஓவென் |
| 17. | ஈ) பண்டகசாலை | 17 | இ) தனியாள் வணிகம் |
| 18. | அ) பொதுப் பண்டகக் காப்பகங்கள் | 18 | ஈ) உரிமையாளர்கள் |
| 19. | அ) Goods and Services Tax | 19 | ஈ) பண்டக சாலை |
| 20. | அ) ஒப்பந்தத்தால் | 20 | இ) சம்பளம்/கூலி |

<u>பகுதி –II</u>

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14**

**வினா எண் 30க்குக் கட்டாயம் விடையளிக்கவும்**

| வினா எண் | | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 21 | ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறை பண்டமாற்று முறை ஆகும். | 2 |
| 22 | பல நபர்கள் ஒன்று சேர்ந்துக் கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர் **( வேறு தகுந்த பதிலை சொந்த நடையில் எழுதியிருந்தாலும் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 23 | இந்திய இரயில்வே துறை, தபால் தந்தி துறை, அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன்,உணவு பொது விநியோகத்துறை, தமிழ்நாடு காவல் துறை. **(ஏதேனும் 2)** | 2x1=2 |
| 24 | தானியங்கி பணம் வழங்கும் அட்டையை பயன்படுத்தி எந்த நேரத்திலும் பணம் எடுக்க உதவும் இயந்திரம். **( வேறு தகுந்த பதிலை சொந்த நடையில் எழுதியிருந்தாலும் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 25 | 1) பொருட்களைப் பாதுகாத்தல்,<br>2) விலைகளை நிலைப்படுத்துதல்,<br>3) தேவை மற்றும் வழங்கலை சமன்படுத்துதல்<br>4) வியாபார நிதி பெற உதவுதல்<br>5) இடர்களை ஏற்றல்<br>6) விற்பனைக்கு முன்னேற்பாடு<br>7) சந்தை எல்லையை விரிவுப்படுத்துதல்<br>8) மதிப்புக்கூட்டப்பட்ட சேவைகள் | 2 |
| 26 | 1) அஞ்சலக சேமிப்பு கணக்கு<br>2) அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு.<br>3) அஞ்சலக நிலை வைப்பு கணக்கு.<br>4) அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு<br>5) மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்<br>6) பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு<br>7) தேசியச் சேமிப்பு பத்திரங்கள்<br>8) கிசான் விகாஸ் பத்திரங்கள்<br>9) சுகன்யா சம்ரித்தி கணக்கு<br>**( ஏதேனும் நான்கு தலைப்புகள் மட்டும்)** | 4x ½=2 |
| 27 | ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பொருட்களை மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும். | 2 |
| 28 | இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் பொருட்களையும் மற்றும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரமாகும். | 2 |
| 29 | சரக்குகள் அல்லது சேவைகளின் மீது வரி விதிக்கப்பட்டு, விற்பனையாளரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி மறைமுகவரி ஆகும்.<br>எ.கா. சரக்கு மற்றும் சேவை வரி, சுங்க வரி, மதிப்புக்கூட்டு வரி | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 30 | • தனியாள் வணிகம்.<br>• ஏனெனில் இதில் ஒருவர் மட்டுமே முதல் தொகையை வழங்குகிறார்.<br>**( வேறு தகுந்த பதிலை சொந்த நடையில் எழுதியிருந்தாலும் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 |

**பகுதி –III**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7x3=21**

**வினா எண் 40க்குக் கட்டாயம் விடையளிக்கவும்.**

| வினா எண் | | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 31 | இயல் பொருட்களை உற்பத்தி செய்வது இல்லை, சேவை பொருட்களை இலாபத்திற்கு விற்கும் தொழில்கள் சேவைத் தொழில்கள் என அழைக்கப்படுகின்றன.<br>**வகைகள் :** தனிச்சேவை, பொதுச்சேவை, விநியோகச் சேவை, நிதிச் சேவை, தனித்துவச் சேவை, தனித்திறன் சேவை. | 2<br>1 |
| 32 | ஒரு நிறுமம் இந்தியாவிற்கு வெளியில் வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு இந்தியாவில் தொழிலிடம் பெற்றிருப்பது. | 3 |
| 33 | பொதுக்கழகம் என்பது பாராளுமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும். | 3 |
| 34 | 1) ‘‘முதலில் சேமிப்பு பிறகு கடன்’’ என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.<br>2) ஓரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை உறுப்பினராகளாக கொண்டு அமைக்கப்படுகிறது.<br>3) இக்குழு 10 முதல் 20 உறுப்பினர்களை கொண்டு செயல்படுகின்றது.<br>4) குழுக்களை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.<br>5) அரசியல் சார்பு இல்லாத தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது.<br>6) ஒவ்வொரு குழுவிலும் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.<br>7) ஆண்கள் மட்டுமோ அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினராக இருத்தல்.<br>8) சுய உதவிக்குழு கூட்டம் ஒய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.<br>9) குழுக்கள் தங்களுக்குள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும்.<br>10) தன் உறுப்பினர்களின் கருத்துக்களை பரிமாறிக் கொள்வது.<br>**(ஏதேனும் மூன்று)** | 3x1=3 |
| 35 | 1) மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.<br>2) மொத்த வியாபாரிகள் பொருட்களை மொத்தமாக வாங்கி சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.<br>3) ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.<br>4) பொருட்களை விநியோகம் செய்ய முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.<br>5) இவ்வகை வியாபாரத்திற்கு பெருமளவில் முதலீடு தேவைப்படுகின்றது.<br>6) மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு கடனுதவி அளிக்கின்றனர் | 3x1=3 |

| | | |
|---|---|---|
| | 7) மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவி செய்தல்<br>8) நகரங்கள் பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் செயல்படுதல். **(ஏதேனும் 3)** | |
| 36 | ஒரு சில பொருட்கள் மட்டும் விற்பனை வசதிகள் இல்லாமை,<br>நேரடிதொடர்பு இன்மை நெகிழ்வுத்தன்மை அற்றது<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 3 |
| 37 | 1. ஒப்பந்தத்தை ரத்து செய்தல்.<br>2. திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு<br>3. தடையுத்தரவிற்கான வழக்கு.<br>4. பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு<br>5. ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு. | 3 |
| 38 | 1. சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15 – 17)<br>2. வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு 22–27)<br>3. வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28–44)<br>4. மூலதன ஆதாயங்கள் (பிரிவு 45–55)<br>5. ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு 56–59) | 3 |
| 39 | சிறப்புத்தொழில் என்பது அந்தந்த துறையால் அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட உயர்கல்வித்தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் ஆகும். | 3 |
| 40 | 1. மிக்கநம்பிக்கை 5.பகிர்ந்தளித்தல்<br>2.காப்பீடுபெறுநலன் 6.பகரஉரிமை<br>3.ஈட்டுறுதி 7.இழப்பை மட்டுப்படுத்துதல்<br>4.அண்மைக்காரணம்<br>**(ஏதேனும் ஒன்று விளக்கத்துடன்)** | 2<br>1 |

## பகுதி –IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7x5=35**

| வினா எண் | | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 41 (அ) | (ஏதேனும் 5) | 5x1=5 |

| தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| சரக்கு மற்றும் சேவை அளித்தல் | சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவை | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல் |
| தகுதி ஏதும் இல்லை | சிறப்பு தகுதி / பயிற்சி | தகுதி இல்லை |
| நிறுவன அளவை பொருத்து மாறும் | வரையறுக்கப்பட்ட நிதி | மூலதனம் தேவையில்லை |
| இலாபம் | தொழில்முறை கட்டணம் | கூலி / சம்பளம் |
| இலாபம் நிச்சயமான மற்றும் நிச்சயமற்றது | கட்டணம் நிலையானது | இடர் ஏதுமில்லை |
| உரிமை மாற்றம் செய்யப்படும் | உரிமை மாற்றம் செய்ய இயலாது | உரிமை மாற்றம் செய்ய முடியாது |

**(ஏதேனும் 5)**

**(அல்லது)**

| | | |
|---|---|---|
| (ஆ) | 1)பொது வருங்கால வைப்பு நிதி<br>2)பரஸ்பர நிதி<br>3)நேரடி சம உரிமைப்பங்குகள் அல்லது பங்கு கொள்முதல்<br>4)அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்<br>5)விலை உயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்<br>6)அஞ்சலகச் சேமிப்பு திட்டம்<br>7)பொது வைப்புகள்<br>8)நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள்<br>9)காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி<br>10)வங்கி வைப்புகள் **( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)**<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 5x1=5 |
| **42**<br>**(அ)** | 1) தனிநபர் உரிமை<br>2)வரையறாப்பொறுப்பு<br>3)முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை<br>4)அரசு விதிமுறைகள் பின்பற்றாமை<br>5)குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை<br>6)தனி நிறுவனங்களின் நீடித்த வாழ்வு<br>7)இரகசியம் காத்தல்<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 5x1=5 |
| | **(அல்லது)** | |
| **(ஆ)** | 1)முனைவும் ஏற்பும் 2)சட்ட உறவு முறை<br>3)சட்டப்பூர்வமான மறுபயன் 4)சட்டப்பூர்வமான நோக்கம்<br>5)தன்னிச்சையான இசைவு 6)ஒப்பந்தத் தகுதி<br>7)தெளிவுடைமை 8)நிறைவேற்றும் தன்மை<br>9)சட்டத்தால் செயல்படுத்தும் திறன் 10)தேவையான சட்ட சடங்குகள்<br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)**<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 5 ×1=5 |
| **43**<br>**அ** | **நிறைகள்:**<br>1. எளிமையான அமைப்பு<br>2. பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக்கட்டுப்பாடு<br>3. இரகசியம் காத்தல்<br>4. பொதுமக்களுக்கு வரிச்சுமை குறைவு<br>5. சமூக மாற்றத்திற்கான கருவி<br>6. பொதுமக்களின் நிதி தவறாக பயன்படுத்துதலினால் ஏற்படும் இடர் குறைவு<br>7. அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்<br>**(ஏதேனும் மூன்று விளக்கத்துடன்)**<br>**குறைகள்:**<br>1) தாமதமும், சிகப்பு நாடா போக்கும்<br>2) கூடுதல் வரிச்சுமை<br>3) போட்டியின்மை | 5 |

| | | |
|---|---|---|
| | 4) பணியில் சராசரி அணுகுமுறை<br>5) அரசின் தலையீடு<br>6) மேலாண்மைத் திறமைக் குறைவு என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும் அச்சம்<br>7) நிதிச் சார்பு **( ஏதேனும் மூன்று விளக்கத்துடன்)** | |
| | **(அல்லது)** | |
| ஆ | 1. இணைப்புச் சங்கிலி<br>2. செயல்பாட்டு அளவு<br>3. கிடைக்கும் பொருட்கள்<br>4. செயல்பாடு<br>5. விற்பனை நோக்கம்<br>6. அளிப்பின் மூலம்<br>7. இடவமைப்பு<br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)**<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 5x1=5 |
| 44 அ | **செயல்முறை விதி:**<br>செல்முறை விதிகள் என்பது நிறுமத்தின் முக்கிய ஆவணமாகும். இதில் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். அட்டவணை ‘‘அ’’நிறுமத்தின் உட்கட்டமைப்பு விதிகளை வெளிப்படுத்தும். | 1 |
| | **செயல்முறை விதியின் பொருளடக்கங்கள்:**<br>• பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகளின்.<br>• ஒவ்வொரு வகைப் பங்குகளின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம் ,பங்கு முதலை திரும்ப பெறுதல் போன்றவை.<br>• பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்<br>• பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுதல் தொடர்பான விதிமுறைகள்<br>• பங்கு மாற்றம் குறித்த விதிகள்<br>• பங்காதாயம் அறிவித்தல்<br>• நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்<br>• இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்<br>• கூட்டங்களை நடத்துதல், பகராள்,குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்<br>• நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்<br>• நிறுமத்தின் பொதுமுத்திரை<br>• நிறுமத்தின் கணக்கு தொடர்பான நடைமுறைகள்<br>**( ஏதேனும் ஐந்து)** | 4 |
| | **(அல்லது)** | |

| | | |
|---|---|---|
| ஆ | **பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள்**<br>**நீக்கப்பட்ட பகுதி**<br>**மாணவர்கள் பதில் அளிக்க முயற்சி செய்து இருந்தால் முழுமதிப்பெண் வழங்கலாம்.** | 5 |
| **45**<br>**அ** | **1)**வீட்டுக்கடன் **4)**கல்விக் கடன்<br>**2)**நுகர்வோர் கடன் **5)**நகைக் கடன்<br>**3)**வாகனக் கடன்<br>**(சிறு விளக்கத்துடன்)**<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | 5x1=5 |
| ஆ | • நிறுவனத்தின் பெயர்<br>• வணிகத்தின் தலைமையிடம்<br>• தொழிலின் கிளை நிறுவனங்களின் முழுவிவரம்<br>• அனைத்துக்கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி<br>• ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள்<br>• கூட்டாண்மையின் காலம்<br>• மேற்காணும் அறிக்கையைத் தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பமிட்டு பதிவாளரிடம் ரூ.3 செலுத்தி சமர்பிக்க வேண்டும்.<br>• இதில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். | 5 |
| **46**<br>**அ** | 1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல் விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.<br>2. உள் நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.<br>3. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.<br>4. இதில் போக்குவரத்து இடர்பாடு பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.<br>5. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.<br>6. உள்நாட்டு போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றது.<br>7. உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமே இடம் பெறும்.<br>8 . அத்தியாவசிய பொருட்களை சிக்கனமாக வழங்குவது<br>9. இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளை உள்ளடக்கியது.<br>10. ஒரே நாட்டிற்குள்ளான நிறுவனங்களுடன் வியாபாரம்<br>11.சுங்கவரி, இறக்குமதி வரி இல்லை **( ஏதேனும் ஐந்து)** | 5x1=5 |
| | **(அல்லது)** | |
| ஆ | **1.**தனியார் பண்டகக் காப்பகங்கள்<br>**2.**அரசு பண்டகக் காப்பகங்கள்<br>**3.**பொதுப் பண்டகக் காப்பகங்கள்<br>**4.**கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்<br>**5..**பிணைய காப்பு பண்டகக் காப்பகங்கள்<br>**6.**நிறுவன முறைப் பண்டகக் காப்பகங்கள் | 5x1=5 |

| | | |
|---|---|---|
| | 7.விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்<br>8.பொதுப் பண்டகக் காப்பகங்கள்<br>9.சிறப்புப் பொருள் பண்டகக் காப்பகங்கள்<br>10.குளிர்பதன பண்டகக் காப்பகங்கள்<br>11.தட்ப வெப்ப நிலை கட்டுப்பாட்டு பண்டகக் காப்பகங்கள்<br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன்)**<br>**(குறிப்பு: தலைப்பு மட்டும் எழுதியிருந்தால் ½ மதிப்பெண் வழங்கலாம்)** | |
| **47 அ** | (see table below) | 5x1=5 |

| நேர்முகவரி | மறைமுகவரி |
|---|---|
| ஒரு நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கபடுகிறது | சரக்குகள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படுகிறது |
| மதிப்பீட்டிற்குரியர் மீது சுமத்தப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்படுகிறது |
| வரி ஏய்ப்பிற்கு வாய்புண்டு | இல்லை |
| பணவீக்கம் குறைக்க உதவுகிறது | பணவீக்கம் ஊக்குவிக்கிறது |
| மாற்ற முடியாது | முடியும் |
| எ.கா சொத்துவரி, வருமானவரி | எ.கா சரக்கு மற்றும் சேவை வரி |

**(அல்லது)**

| | | |
|---|---|---|
| **ஆ** | • கடற்கரையை ஒட்டிய பகுதி பாக்கம் எனப்படும். பண்டைய பூம்புகார் நகரத்திலிருந்த முக்கிய நகரங்கள் மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் .<br>• இங்கு உணவுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் செய்யக்கூடிய அங்காடிகளும், வெளி நாடுகளோடு கடல் வழி வணிகம் செய்த வியாபாரிகளும் வசித்தார்கள்.<br>• தொண்டி, கொற்கை,பூம்புகார் மற்றும் முசிறி போன்ற துறைமுகங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சிறப்பாக நடைபெற்றன.<br>• முத்துக்கள்,பவளங்கள்,மீன் பிடித்தல்,உப்பு உற்பத்தி,கப்பல் கட்டுதல் போன்றவற்றில் பாண்டியர்கள் சிறந்து விளங்கினர்.<br>• குறிப்பாக சிறிய படகு,திமிலா,தோணி,அம்பு,ஓடம்புனை,கட்டுமரம் முதலியவை உள்நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவு கலம், மரக்கலம்,நாவாய் முதலியன் வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர். | 5 |